***கவனிக்க.*** *- 2016.09.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1987 - 2016 සැප්තැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2016.09.30

*1987 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1776* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1781* |

**கவனிக்க.**- ராஜித சேனாரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, யூன் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, செத்தெம்பர் 08.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பேருவளை | மிகிரிபென்ன பிரதேசத்தின் களுத்துறை, பாணந்துறை மற்றும் தொடமுண பிரிவின் மேலதிக முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |

9-1029

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, செத்தெம்பர் 08.

#### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | ஹொரணை | மிள்ளேவ பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ரயிகம கோறளைப் பிரிவில் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |

9-1030

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, செத்தெம்பர் 9.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | உடுநுவர | எல்பிட்டிய மற்றும் கெலிஓயா பிரதேசத்தின் உடுநுவர மற்றும் யட்டிநுவர பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

9-1031

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, செத்தெம்பர் 9.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | திக்வெல்ல | திக்வெல்ல பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |

9-1032

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, செத்தெம்பர் 9.

#### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | ஹல்தமுல்ல | ஹல்தமுல்ல பிரதேச செயலாளர் பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

9-1033

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கட்டடத் திணைக்களம்

முகாமைத்துவ உதவியாளர்-தொழில்நுட்பப் பிரிவு 03 சேவை வகையின் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III (குடிசார்/ மின்/ பொறிமுறை)

1.0 கட்டடத் திணைக்களத்தில் மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து கட்டடத் திணைக்களத்தின் கட்டடப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. கட்டடத் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வ கடமைகள் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்தளங்கள் நாடு முழுவதும் பரந்துள்ளதுடன், மேல் மாகாணத்தோடு, கூடுதலான நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வடக்கு (யாழ்ப்பாணம், வவுனியா), கிழக்கு (அம்பாறை) மற்றும் வடமத்திய (பொலன்னறுவை) மாகாணங் களில் புதிய தொழில்நுட்ப உதவியாளர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

2.0 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 அளவான தாளின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயார் செய்து கொண்ட விண்ணப்பப் படிவத்தை 2016.10.30 ஆம் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கட்டடத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் – தொழில் நுட்பப் பிரிவு 03 சேவை வகையின் தொழில் நுட்ப உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கின்ற, தெளிவற்ற மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாதுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**3.0 சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

3.1 இந்தப் பதவி நிரந்தரமானது. உங்களுக்குரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற கொள்கை நடைமுறை களுக்கு நீங்கள் இணங்க வேண்டும்.

3.2 அரசாங்க சேவையின் நியமனங்கள் தொடர்பான தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 – 12 வரையான பிரிவுகளின் நடைமுறை விதிகளும் இதற்கு ஏற்புடையனவாகும்.

3.3 தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களக் கட்டளை களுக்கும், காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற வேறு ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் இணங்கியொழுக வேண்டும்.

**4.0 பொதுவான தகைமைகள் :**

4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2 சிறந்த நன்னடத்தையுடையவராகவும், நல்ல தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

4.3 ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற வேண்டும்.

4.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாதவ ராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**5.0 சகல பதவிகளுக்கும் தேவையான கல்வித் தகைமைகள் :**

5.1 தமிழ் மொழியும் இலக்கியமும் கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு (6) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சித்தி யடைதல் வேண்டும்.

**6.0 தொழில்சார் தகைமைகள் :**

6.1 **முகாமைத்துவ உதவியாளர்.**- தொழில்நுட்பப் பிரிவு 3 சேவை வகையின் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப தரப்படுத்தல் (NVQ) ஐந்தாவது (5) மட்டத்திற்கு சமமான அரச தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளப்பட்ட தேசிய தொழில்நுட்ப (குடிசார்/ மின்/ பொறிமுறை) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**7.0 தெரிவு செய்யும் அடிப்படை :**

7.1 எழுத்து மூலமான பரீட்சைக்குரிய நிபந்தனைகள்.- இதற்கான எழுத்து மூலப் பரீட்சை கட்டடத் திணைக்களம் சார்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், அவர் அறிவிக்கும் தினத்தில் பரீட்சை நடாத்தப்படும். அவர் விதிக்கின்ற சட்டங்கள், விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுதல் வேண்டும்.

7.2 தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்ப தாரர்கள் எழுத்து மூலமான பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சை யில் தோற்றுவதற்காக ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும், ஆகக் குறைந்தது 40% ஆன புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

மேற்படி பரீட்சையில் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட ஒழுங்குவரிசையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதிவாய்ந்தவர்கள் குறித்த புள்ளிகளின் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் தேர்ந்தெடுக் கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படுவதில்லை என்பதுடன் தகைமைகள் மாத்திரம் பரிசீலனை செய்யப்படும்.

7.3 எழுத்து மூலமான பரீட்சைக்கு ஏற்புடைய விடயங்கள் பின்வருமாறாகும்.

| *பாடங்கள்* | *நேரம்* | *உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை* | *சித்தியடைவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. உளச்சார்புப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. தொழில் நுட்பத் திறன் | 3 மணித்தியாலம் | 100 | 40 |

| *வினாத்தாளின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| 1. உளச்சார்புப் பரீட்சை | புரிந்துகொள்ளும் சக்தி, தர்க்க ரீதியான அறிவு, சரியாக தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல், எண்கள் மற்றும் கணித சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல், மொழித் தொடர்கள், அட்டவணை, படம், குறிப்பு, வரைபடத்தைப் பயன்படுத்தல். |
| 2. தொழில் நுட்பத் திறன் பரீட்சை | *குடிசார்.-* கட்டட வரைபடம் பற்றிய அறிவு, அடிக்கல், மண் வகை, கட்டடப் பொருட்கள், கட்டட ஒழுங்கமைப்பும் நிறைவு செய்வதும், கட்டட வரைபடங்களின் மூலம் அளவைகளைப் பெற்றுக் கொள்ளல், மதிப்பீடுகளைத் தயார் செய்தல், நீர் வழங்கலும் கழிவுநீர் அகற்றும் வடிகாலமைப்பும். *மின்.-* கட்டடங்களின் மின் சுற்றுக்கள் பற்றிய அறிவு, பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகள், கட்டட வரைபடம் பற்றிய அறிவு, மதிப்பீடுகளைத் தயார் செய்தல் மற்றும் மின் சுற்றுக்களின் சீரான தன்மையைப் பரிசீலனை செய்தல். *பொறிமுறை.-* வாகனங்களை வகைப்படுத்தல், புதுப்பித்தல் மற்றும் சேர்விஸ் செய்யும் போது பயன்படுத்துகின்ற உபகரணங்கள், எஞ்சின் செயற்பாடு பற்றிய அறிவும், கட்டடங்களுக்குப் பயன்படுத்தும் வளிச்சீராக்கி இயந்திர வகைப்படுத்தல் பற்றிய, அலுவலக உபகரணங்களை வகைப்படுத்தல் பற்றிய அறிவு. |

7.4 எழுத்து மூலப் பரீட்சை சிங்களம்/ தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் மூலமும் நடாத்தப்படும்.

8.0 **ஆட்சேர்ப்புச் செய்தல்.**- மேலே 5.0 மற்றும் 6.0 இன் கீழ் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன், எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்கள் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) மற்றும் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்/மின்/பொறிமுறை) - பயிற்றுவித்தல் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

9.0 **சம்பள அளவுத்திட்டம்.**- முகாமைத்துவ உதவியாளர் - தொழில் நுட்பப் பிரிவு 03 சேவை வகையின் தொழில் நுட்ப உதவியாளர் III தரம் (குடிசார்/ மின்/ பொறிமுறை)

ரூபா 29,840 – 10 x 300 – 11 x 350 – 10 x 560 – 10 x 660 – ரூபா 48,890.

(பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.)

10.0 **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். விண்ணப்பதாரர்கள் திருப்பிச் செலுத்தப் படாத 1,000 ரூபா பரீட்சைக் கட்டணத்தை நாடு முழுவதிலும் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகத்தின் மூலமும் (உப தபால் அலுவலகங்கள் தவிர) "SLIDA" கணக்கிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், இந்தக் கொடுப்பனவு தொடர்பாக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டின் இலக்கத்தை பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் 12 ஆம் இலக்கத்தின்கீழ் குறிப்பிடுதல் வேண்டும்.

குறித்த தபால் அலுவலகத்தில் "SLIDA" கணக்கிற்கு கொடுப்பனவைச் செலுத்துவதற்கான படிவத்தை நிரப்பும் போது, பணத்தைப் பெற்றுக் கொள்பவராக "SLIDA" என்றும், பணம் பெற்றுக் கொள்பவரின் முகவரி எனும் இடத்தில் உங்களுக்குரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரையும் குறிப்பிடுக. (குறியீட்டுப் பெயர்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.)

| | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 1. | முகாமைத்துவ உதவியாளர்.- தொழில் நுட்பப் பிரிவு 03 சேவை வகையின் தொழில்நுட்ப உதவியாளர் III தரம் (குடிசார்/ மின்/ பொறிமுறை) | TA |

மேலும், கணக்கிற்கு பணம் செலுத்தும் போது பணம் அனுப்புபவராக விண்ணப்பதாரரின் பெயரையும், பணம் அனுப்புபவரின் முகவரி எனும் இடத்தில் விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும், குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

11.0 யாராயினுமொரு விண்ணப்பதாரரின் விண்ணப்பப் படிவத்தில் யாதாயினும் தவறான, பொய்யான கூற்றுக்கள் இருப்பதன் காரணமாக அவர் தகைமையற்றவராக்கப்பட முடியும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட பின்னர் இது பற்றி அறியக்கிடைக்கும் பட்சத்தில் அவர் பதவிநீக்கம் செய்யப்பட முடியும்.

12.0 **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்ப தாரர்கள் தமது மாதிரி கையொப்பத்தை, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ஓய்வுபெற்ற அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர் அல்லது 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலை அலுவலர் அல்லது நாயக்க தேரர் அல்லது வேறு மதவழிபாட்டுத்தளமொன்றிற்குப் பொறுப்பான மதத் தலைவர் அந்தஸ்தில் உள்ளவராகக் கருதப்படக்கூடிய ஒருவர் மூலம் சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

இதில் குறிப்பிடப்படாதுள்ள விடயமொன்று தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் அலுவலராக கட்டடப் பணிப்பாளர் நாயகம் செயற்படுவார்.

எம். ஆர். ஜெயசந்திரன்,
கட்டடப் பணிப்பாளர் நாயகம்.

கட்டடத் திணைக்களம்,
செத்சிறிபாய,
பத்தரமுல்லை,
2016.09.14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பப் பிரிவு 03 சேவை வகையின் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III**

[ ]
அலுவலக உபயோகத்திற்கு

(உரிய கூட்டில் ✓ அடையாளத்தை இடுக)

| | |
|---|---|
| குடிசார் | |
| மின் | |
| பொறிமுறை | |

1. (i) முழுப்பெயர் :----.
(ii) முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களம்/ தமிழ் மொழியில்) :----.
(iii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2. முகவரியும், தொலைபேசி இலக்கமும் :
(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
(ii) சொந்த முகவரி :----.
(iii) தொலைபேசி இலக்கம் :----.
(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :----.

3. பால் :
ஆண் - 0
பெண் - 1 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

5. (i) பிறந்த திகதி :
ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]
(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் வயது :
வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

6. திருமணமானவரா / திருமணமாகாதவரா என்பது:
திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக)

7. க.பொ.த. (சா. த.) பரீட்சையின் விபரங்கள் (முதல் தடவை) (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

(i) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டும் மாதமும் : ----.

(ii) விண்ணப்பதாரரின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ...................... | ......... | ....................... | ........ |
| ...................... | ......... | ....................... | ........ |
| ...................... | ......... | ....................... | ........ |
| ...................... | ......... | ....................... | ........ |
| ...................... | ......... | ....................... | ........ |

8. க.பொ.த. (சா. த.) பரீட்சையின் விபரங்கள் (இரண்டாம் தடவை) அவசியமாயின் மாத்திரம் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

(i) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டும் மாதமும் : ----.

(ii) விண்ணப்பதாரரின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ...................... | ......... | ....................... | ........ |
| ...................... | ......... | ....................... | ........ |
| ...................... | ......... | ....................... | ........ |
| ...................... | ......... | ....................... | ........ |
| ...................... | ......... | ....................... | ........ |

9. க.பொ.த. (உ. த.) பரீட்சையின் விபரங்கள் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :
பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு ---- மாதம் ---- திகதி ----
விண்ணப்பதாரரின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ...................... | ......... | ....................... | ........ |
| ...................... | ......... | ....................... | ........ |

10. ஏனைய தகைமைகள் : தொழில்நுட்ப/ தொழில்சார் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :----.

11. உரிய துறை தொடர்பாக பெற்றுள்ள அனுபவம் :----.

மேலே 10,11 இற்குரிய தகைமைகளை உறுதிப்படுத்து கின்ற சான்றிதழ்களை இணைப்பாக சமர்ப்பிப்பது அத்தியாவசியமாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

12. பரீட்சைக் கட்டணம் :

பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம்

| S | L | D | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

1,000 ரூபா பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும். (பற்றுச்சீட்டின் பிரதியை உங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

13. விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற ........................................................................ (முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், ............................ திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.
திகதி :----.

14. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். மேலும், இதில் உள்ளடங்கும் யாதாயினுமொரு தகவல் பிழையானதென்றும், உண்மைக்கு மாறானதென்றும் கண்டறியப்படும் பட்சத்தில், அவ்வாறு கண்டறியப்படுவது பதவிக்குத் தெரிவு செய்யப்பட முன்னர் இடம்பெறுமாயின் நான் தகுதியற்றவனாவேன் என்றும், நியமனம் பெற்ற பின்னர் கண்டறியப்பட்டால் எந்தவொரு நட்டஈடும் செலுத்தப்படாது பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர் களுக்கு மாத்திரம்

மேற்படி விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ........................................................................ தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தில் ..................... .............................. ஆக நிரந்தர/ தற்காலிக/ அமய ஊழியராக சேவையாற்றுகின்றார் என்றும், இப்பதவிக்கு இவர் தெரிவு செய்யப்படுவாராயின், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

9-1131

## மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2016

## First Efficiency Bar Examination for Women Development Officers of Ministry of Women and Child Affairs - 2016

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.10.24 என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. **பரீட்சைப் பாடத்திட்டம்.**- இந்த வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை பின்வரும் பாடங்களை உள்ளடக்கியிருக்கும். இந்தப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் ஊடக மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| | | |
|---|---|---|
| பாட இலக்கம் 01 | - | நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அலுவலக நடைமுறைகள். காலம் - 2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள் |
| பாட இலக்கம் 02 | - | பால் நிலையும் பெண்ணுரிமை களும். - காலம் - 2 மணித்தியா லங்கள் - 100 புள்ளிகள் |
| பாட இலக்கம் 03 | - | சமூக விஞ்ஞானமும் உள வளத் துணையும். காலம் - 2 மணித்தி யாலங்கள் - 100 புள்ளிகள் |

**குறிப்பு** :

(அ) சகல பாடங்களுக்கும் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான பல அமர்வுகள் மூலம் உத்தியோகத்தரொருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி உண்டு ;

(ஆ) சித்தியடைவதற்கு சகல வினாப்பத்திரங்களிலும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(இ) சகல வினாப்பத்திரங்களும் கட்டாயமாக விடையளிக்கவேண்டிய வினாக்களைக் கொண்டிருக்கும்.

3. **பாடங்கள்** :

3.1 A பகுதி - நிதி ஒழுங்குவிதிகள் :

இலங்கையின் அரசாங்க முகாமைத்துவக் கட்டமைப்பு.

நிதிக் கட்டுப்பாடு மற்றும் வருடாந்த மதிப்பீடுகள்.

(அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் I ஆம் தொகுதி X அத்தியாயம் தவிர்ந்த).

B பகுதி - அலுவலக நடைமுறைகள் :

தாபன விதிக்கோவையின் கட்டளைகள்.

அலுவலக முகாமைத்துவம் மற்றும் தாபன விதிக்கோவை பின்வரும் அத்தியாயங்களைக் உள்ளடக்கியிருக்கும் :

(I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXI, XXXII, XXXIII)

3.2 பால்நிலையும் பெண்ணுரிமைகளும் :

பெண்களுக்கு எதிரான பாரபட்சம்

இலங்கை சமூகத்தில் பால்நிலை

இலங்கை பெண்கள் சாசனம் மற்றும் பெண்களது உரிமைகள்

3.3 சமூக விஞ்ஞானமும் உளவளத்துணையும் :

கிராமிய சமூக விஞ்ஞானம்

இலங்கையில் நகராக்கம்

கிராமிய அபிவிருத்தி

உளவளத்துணையின் அடிப்படைப் பண்புகளும் ஒழுக்கங்களும்

பெண்ணும் மானசீக மோசடிகளும்

இலங்கையின் உளவளத்துணை இயக்கமும் உளவளத்துணைக்கான சந்தர்ப்பங்களும்

4. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக பரீட்சார்த்திகள் தங்களது விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவம் ஏ4 அளவிலான தாளில் இல. 1 முதல் 6 வரை முதல் பக்கத்திலும் ஏனைய பகுதிகள் அடுத்து வரும் பக்கங்களில் அமையுமாறும் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். பரீட்சார்த்தி தனது கையெழுத்தினால் விண்ணப்பத்தை நிரப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தயாரிக்கின்றபோது தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத் திலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங் களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்றபோது விண்ணப்பதாரி வகிக்கும் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளிலும் ஏற்புடையதாக இருக்கும். விண்ணப்பங்களை அனுப்பிய பின்னர் அது தொடர்பாக நிகழும் மாற்றங்கள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படாது.

5. விண்ணப்பங்களைத் தனது திணைக்களத் தலைவர் ஊடாக (பிரதேச செயலகமெனின் பிரதேச செயலாளர் ஊடாக) 2016.10.24 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல்

வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சைக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச கரும மொழிக் கொள்கை தொடர்பான செயற்பாடுகளுக்காக புதிதாக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் தனது விண்ணப்பங்களை அரச கரும மொழியில் அல்லது சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட ஊடக மொழிக்கு அமைய தமிழ் மொழியிலோ/ ஆங்கில மொழியிலோ தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.

6. (i) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றி குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 தினங்களில் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவிடத்து அங்கு குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க அது பற்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்கள் வசம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியொன்றுடன் தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றுடன் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரிக்கும்படி அறியத்தருவதோடு, கொழும்புக்கு வெளியிலுள்ள ஒரு பிரதேசத்தில் வசிப்பவராயின் மேலுள்ள தகவல்களுடன் தங்களுக்கு அனுமதி அட்டையை அனுப்புவதற்கு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கமொன்றையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதம் ஒன்றை பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைப்பது சாலச்சிறந்ததாகும்.

(ii) பரீட்சார்த்திகள் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அத்தோடு பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்று பரீட்சை நிலைய அதிபருக்கு தனது கையொப்பத்தை உறுதி செய்த அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுள்ளவர் என்பதை ஏற்றுக்கொண்டதாக அமைய மாட்டாது.

7. **ஆள் அடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு வினாத்தாளின்போதும் பரீட்சை நிலைய அதிபருக்கு தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) கடவுச்சீட்டு (பாஸ்போர்ட் அனுமதிப்பத்திரம்).

மேற்படியான ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த தகைமையை இரத்துச் செய்வதற்கோ அல்லது ஏற்காதிருப்பதற்கோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படும் :-

| பரீட்சைக் கட்டணம் | ரூ. ச. |
|---|---|
| (அ) முதலாவது அமர்வுக்கு பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது | - |
| (ஆ) முதலாம் அமர்வுக்குப் பின்னர் முழுப் பரீட்சைக்காகவும் | 400 0 |
| (இ) ஒரு பாடத்திற்கு | 200 0 |

பரீட்சைக் கட்டணங்கள் பரீட்சை ஆணையாளரது வருமானத் தலைப்பு 2003.02.13 இன் கீழ் அரசாங்கத்தின் வருமானத்திற்கு சேரும் விதத்தில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால்/ உப தபால் நிலையங்களில் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட ரசீதை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படாது. பரீட்சைக்காக செலுத்திய பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீண்டும் பெறுவதற்கோ அல்லது வேறு பரீட்சையொன்றுக்கு மாற்றீடு செய்வதற்கோ முடியாது. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

9. (i) இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். அவரால் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பணிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக வேண்டி ஏற்படும்.

(ii) பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளது பெறுபேறுகள் உள்ளடங்கிய அட்டவணை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

10. இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுள்ள மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டையொன்று வழங்கப்பட்டுள்ள திணைக்கள/ நிறுவனங்களினது உத்தியோகத்தர்களுக்கு திணைக்கள/ நிறுவனத் தலைவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கடமை லீவு வழங்குதல் வேண்டும்.

11. இந்த ஒழுங்குவிதிகளில் உள்ளடக்கப்படாத ஏதேனுமொரு விடயம் இருக்குமிடத்து அது தொடர்பாக மகளிர் மற்றும்

சிறுவர் விவகார அமைச்சு செயலாளரின் தற்றுணிபின் பேரில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

செயலாளர்,
மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு,
5 ஆம் மாடி,
'செத்சிறிபாய', 2 ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.
2016, செத்தெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016**

First Efficiency Bar Examination For Women Development Officers of Ministry of Women and Child Affairs - 2016

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் எழுதுக.)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலில் குறிப்பிட்டு அடுத்ததாக முதலெழுத்துக்களைக் குறிப்பிடுக (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2. அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2.1 அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.2 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 தொலைபேசி இலக்கம் :----.

3. பால் நிலை :

3.1 பெண்-1 ; ஆண்-0 ☐

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.2 விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :----.
விவாகமானவர்-1 ; விவாகமாகாதவர்-2 ☐

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.4 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு (2016.10.24) வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி (கடமையை பொறுப்பேற்ற தினத்தைக் குறிப்பிடுக.) :----.

5. அரசகரும மொழிக்கொள்கை நோக்கங்களுக்கான பழைய உத்தியோகத்தரா அல்லது புதிய உத்தியோகத்தரா ? : ----.

6. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகம் எனின் அதன் பெயரைக் குறிப்பிடுக.) :----.

7. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின்கீழ் தோற்றும் பாடங்கள் மற்றும் பாட இலக்கங்கள் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| 1. ------------------- | ☐☐ |
| 2. ------------------- | ☐☐ |
| 3. ------------------- | ☐☐ |

8. பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றுகின்றீரா ? : ----.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட தபாலகம் : ----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்திய தினம் :

| |
|---|
| பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும் (பிரதியொன்றை வைத்திருக்கவும்.) |

10. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமையுள்ளது என்றும் குறிப்பிடுகின்றேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுவேன் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- விண்ணப்பதாரி தனது திணைக்களத் தலைவரின் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரொருவரின் முன்னிலையில் கையொப்பமிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

எனது அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தரான, நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்த திருமதி/ செல்வி ............ ........................................... என்பவர் ............................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

திணைக்களத் தலைவரின் சிபாரிசு :

மேலே தரப்பட்டுள்ள விடயங்களைப் பரீட்சித்துப் பார்த்தேன் என்றும் அவை சரியானவையென்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதென்றும் விண்ணப்பதாரி முதல் முறையாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றார் என்றும் பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பொருத்தமானவர் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.)

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(தேவையற்ற சொற்களை நீக்கிவிடவும்.)

9-1133

## உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தானிய அளவையாளர் - தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

உணவு ஆணையாளர் திணைக்களத்தில் நிலவும் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தானிய அளவையாளர் - தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதி பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு இணங்க திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்கும் விண்ணப்பதாரர்களில் ஒருவர், தானிய அளவையாளர் - தரம் III பதவிக்கு நியமிப்பதற்காகத் தெரிவுசெய்யப்படுவார்.

3. நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி உணவு ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும். இப்பதவி வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாமல் இருப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை உணவு ஆணையாளருக்குரியதாகும்.

4. **மாதாந்த சம்பளத்திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் MN 03-2016 சம்பள வகுதி என்பவற்றுக்கிணங்க ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 ஆகும். ரூபா 36,150 இற்கு அப்பால் செல்வதற்கு II ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெறுவதும் ரூபா 43,480 இற்கு அப்பால் செல்வதற்கு I ஆம் தரத்திற்குத் தரமுயர்வு பெறுவதும் கட்டாயமானதாகும்.

5. இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

6. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவை நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளும் இப்பதவிக்கு ஏற்புடையதாவதுடன் 2012.07.26 ஆந் திகதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அவ் ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்ட வகையில் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் மேற்பார்வை முகாமைத்துவ தொழில்நுட்ப உதவியாளர் (தானிய அளவையாளர் - தரம் III) பதவிக்கு நியமிக்கப்படுவர். அதற்கான தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும். அந்த 3 வருட காலத்தினுள் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதுடன் II ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெறுவதற்கு 3 வருடங்களுக்கு முன்னர் இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். மேலும் நியமனம் கிடைத்து 5 வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய 07/ 2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க இரண்டாம் அரச கரும மொழியில் தேர்ச்சி பெறுவது அவசியமாகும்.

7. **தகைமைகள்**.- மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் (தானிய அளவையாளர் - தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) கீழ்க்குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

(i) இரசாயன விஞ்ஞானம் மற்றும் பௌதிக விஞ்ஞானம் உட்பட மூன்று திறமைச் சித்திகளுடன் (பொது அறிவு மற்றும் பொது ஆங்கிலம் தவிர) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கில மொழி மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் குறைந்தது ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

(உ) கீழ்க்குறிப்பிடப்படும் தொழில் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

(i) விவசாயம் அல்லது உணவுத் தொழில்நுட்பத் துறையில் தேசிய தொழில் தகைமைப் பாடநெறியின் (NVQ) 5 ஆவது மட்டம் அல்லது அதற்கு மேலான மட்டத்திலான தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் ;

அல்லது

(ii) கமத்தொழில் திணைக்களத்தினால் நடாத்தப் படும் விவசாயக் கல்லூரியொன்றில் விவசாயம் சம்பந்தமான இரண்டு வருட டிப்ளோமா பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றி ருத்தல் ;

அல்லது

(iii) விவசாயம் அல்லது உணவுத் தொழில்நுட்பத் துறையில் உயர் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் - HNDT (Agriculture or Food Technology) ;

அல்லது

(iv) விவசாயம் அல்லது உணவுத் தொழில் நுட்பம் சம்பந்தமாக மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு சகல வகையிலும் சம மானதென மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தகைமை அல்லது பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அல்லது நிறுவனமொன்றினால் வழங்கப்படும் டிப்ளோமா தகைமைக்கு சமமானதென ஏற்றுக் கொள்ளப்படும் தகைமையைப் பெற்றிருத்தல்.

(ஊ) உணவுத் தொழில்நுட்பத் துறையில் 2 வருட அனுபவத்தைக் கொண்டிருப்பது கட்டாயமானதாகும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்குரிய அனைத்துத் தகைமைகளையும், விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருப்பது அவசியமாகும்.

8. **பரீட்சை நடைமுறை** :

8.1 இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய ஊடக மொழிகளில் நடாத்தப்படும் என்பதுடன், விண்ணப்பித்த பின்னர் ஊடக மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

(1) நுண்ணறிவு - 100 புள்ளிகள் - 1 மணித்தி யாலம்

(2) உணவுத் தொழில்நுட்பம் - 100 புள்ளிகள் - 1 மணித்தியாலம்

1. **நுண்ணறிவு**.- பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு செய்து சிந்திக்கும் ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றைச் சோதிக்கும் வினாப்பத்திரமாக இது அமையும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை வடிவிலான 50 வினாக்களைக் கொண்டிருக்கும்.

2. **உணவுத் தொழில்நுட்பம்**.- தானிய அளவை மற்றும் தரக் கட்டுப்பாட்டு முறை தொடர்பான அறிவை அளவிடுவதற்கான ஒரு வினாப் பத்திரமாக இது அமையும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (பரீட்சார்த்தியின் பணிக் கடமைகளுக்கான தகைமைகளையும் ஆற்றல்களையும் சோதிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.)

8.2 ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் நாற்பது சதவீதம் (40%) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களில் ஆகக்கூடிய தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சை, தகைமைகளைக் கண்டறிவ தற்காக மாத்திரமே நடாத்தப்படும்.

8.3 ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40%) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களைத் தெரிவுசெய்து அவர்களின் அப்புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கு இணங்க முன்னுரிமை அட்டவணையொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு உணவு ஆணையாளர் திணைக்களத்தின் உணவு ஆணை யாளருக்கு வழங்கப்படும். மேலும் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத் தளத்தில் வெளியிடப்படும்.

9. **பொய்யான தகவல்களுக்கான தண்டனைகள்**.- விண்ணப்பங்களை நிரப்புகின்றபோது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குவது அவசியமாகும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் என்று தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறுகின்றபோது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பொய்யானவை என ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து எவ்வித இழப்பீட்டுக் கொடுப்பனவுமின்றி நீக்கப்படுவார்.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 750 ரூபாவாகும். இப்பரீட்சைக் கட்டணத்தை, நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு தபால் அலுவலகத்தின் அல்லது உப தபால் அலுவலகத்தின் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்புச் செய்து பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். விண்ணப்பதாரரின் பெயரில் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டுவது அவசியமாகும். இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தங்களுடன் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

11. **விண்ணப்பங்கள்**.- ஏ4 (24 x 29 செ. மீ.) தாளைப் பயன்படுத்தி-

(அ) 1 முதல் 4 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ) 5 இல் இருந்து இறுதி வரையான பந்திகள் அடுத்த பக்கத்திலும் உள்ளடங்கும் விதத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்களைத் தயாரிக்கின்றபோது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழியிலான விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழியிலான விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

உரிய தகவல்களை தமது கையெழுத்துக்களிலேயே தெளிவாக எழுதுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்கத் தயாரிக்கப்படாத விண்ணப் பங்களும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பங்களும் சரியான முறையில் நிரப்பப்படாத பூரணமற்ற விண்ணப்பங்களும் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப் படிவங்களை நிரப்பாமையினால் ஏற்படக்கூடிய இழப்பினை, விண்ணப்பதாரர்கள் பொறுப்பேற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைத் தங்களுடன் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள், பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக அமைதல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து, விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

11.1 அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதுப் பிரிவில் அடங்கும், உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய முறையில் செலுத்திய, உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும். எவ்வாறாயினும், பரீட்சைக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது, ஒரு விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை அவர் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக அமையமாட்டாது என்பதைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

11.2 விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறை யின் இடதுபக்க மேல் மூலையில், “மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தானிய அளவையாளர் தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2016” என்று குறிப்பிடுவது அவசியமாகும்.

11.3 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

11.4 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2016, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

*12.* **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள, பரீட்சை நடைபெறும் திகதிக்கு ஆகக்குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னர் தமது அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவில் விசாரிப்பது அவசியமாகும். அவ்வாறு விசாரிக்கின்றபோது, தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடுவது அவசியமாகும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியில் வதியும் ஒருவராக இருப்பின், அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை உடனடியாகப் பெற முடியுமான விண்ணப்பதாரர்களின் தொலைநகல் இலக்கங்களையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி அது தொடர்பில் விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கின்றபோது பரீட்சைத் திணைக்களத்தினால் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் உள்ள விண்ணப்பத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும், விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

*12.1* (i) பரீட்சார்த்தியின் ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிப்பது அவசியமாகும் :-

* ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப் படும் செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
* செல்லுபடியான கடவுச்சீட்டு.

(ii) பரீட்சை நடைபெறும் தினத்தில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம், தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிப்பது அவசியமாகும்.

*13.* பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களே இறுதித் தீர்மானங்களாக அமையும். பரீட்சை தொடர்பான சட்டதிட்டங்களை மீறுமிடத்து அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகவேண்டி ஏற்படும்.

*14.* இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை உணவு ஆணையாளருக்கு உள்ளது. விண்ணப்பதாரர்கள் அனைவரும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் குறிப்பிடப்படும் பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கச் செயற்படக் கடமைப்பட்டுள்ளனர்.

ஜே. கிருஷ்ணமூர்த்தி,
உணவு ஆணையாளர்.

உணவு ஆணையாளர் திணைக்களம்,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02,
2016, செத்தெம்பர் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தானிய அளவையாளர் - தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

Open competitive Examination for Recruitment to Supervisory Management Assistant Technical Officer in Food Commissioners Department (Class III of Grain Surveyor) - 2016

| |
|---|
| |

(அலுவலக பயன்பாட்டிற்கு மாத்திரம்)

* நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

1.

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர் முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDHANA. H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2.

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
2.3 அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3.

3.1 பெண்/ ஆண்-

ஆண் - 0

பெண் - 1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

4. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2016.10.21 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5. கல்வித் தகைமைகள் :

5.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சை நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் :----.

(ii) பரீட்சை சுட்டெண் :

(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

5.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சை நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் :----.

(ii) பரீட்சை சுட்டெண் :----.

(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5.3 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டமொன்றைப் பெற்றிருப்பின் :

(i) பல்கலைக்கழகம் :----.

(ii) பட்டம் :----.

(iii) பரீட்சை இலக்கம் :----.

6. தொழில் தகைமைகள் :

(i) :----.

(ii) :----.

7. அனுபவம் :----.

8. நீங்கள் எப்போதேனும் ஏதேனும் ஒரு குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றமொன்றினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ?

* (உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக)

ஆம் ☐ இல்லை ☐

ஆமெனின், விபரங்களைக் குறிப்பிடுக :----.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.

(iii) செலுத்திய தொகை ரூபா :----.

| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டுங்கள் (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருக்கவும்) |
|---|

10. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப் பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்ட வற்றில் ஏதேனும் ஒரு பகுதியை நிரப்பாமை யினால் மற்றும்/ அல்லது பிழையாக நிரப்பியமை யினால் ஏற்படக்கூடிய இழப்புக்களைப் பொறுப்பேற்பதாக உடன்படுகின்றேன். மேலும் அனைத்துப் பகுதிகளையும் சரியான முறையில் பூர்த்திசெய்திருப்பதாகவும் வெளிப் படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இவ்வெளிப்படுத்துகை பொய்யானது என்று நிருபிக்கப்படுமிடத்து, நியமனத்திற்கு முன்னர் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனத்தின் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிட்ட தகவல்களில் எந்தவொன்றையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளார் என்பதையும், அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் அவர் என் முன்னிலையில் ...................................... ........... ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்துக).
திகதி :----.

12. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்** (அரச/ மாகாண அரச/ அரச கூட்டுத்தாபனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்) :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி .................................. இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ மாகாண சபையில்/ நிறுவனத்தில் .. ............................... ஆக பணியாற்றுவதுடன், அவரது விண்ணப்பத்தைச் சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இந்தப் பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்பட்டால் இந்த நிறுவனத்திலிருந்து விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்துக).
திகதி :----.

9-1096

## இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2017, சனவரி மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சைத் திகதி உரிய காலத்தில் பத்திரிகையினூடாக அறிவிக்கப்படும்.

பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண், பெண் இரு சாராரிடமிருந்தும் இப்பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகைமைத் திறன்.-**

(i) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வருவனவற்றை ஆதாரப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாமலும், 33 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய வயது தொடர்பிலான தகைமை விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 1994.10.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ மற்றும் 1983.10.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னராகவோ அமைந்திருந்தால் மாத்திரமே முழுமையாகும்.)

(ii) *கல்வித் தகைமைகள்.-* சகல பரீட்சார்த்திகளும் பின்வரும் கல்வித்தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து அளவையியல் விஞ்ஞானத்தில் பட்டத்தையோ அல்லது கணிதம் அல்லது பௌதீக விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டத்தையோ அல்லது கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையோ (க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் கணிதத்தை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருந்தல் வேண்டும்.) அல்லது சிவில் எந்திரவியல் பட்டத்தையோ பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பட்டத்திற்கான பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் எவரும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது. எனினும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்பரீட்சையில் சித்தியடைந்து பட்டச் சான்றிதழுக்காகக் காத்திருக்கும் ஒருவர், அவர் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகப் பதிவாளரிடமிருந்து பட்டப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் எனக் குறிப்பிடும் உத்தியோகபூர்வக் கடிதமொன்றைப் பெற்று அதனை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிப்பதனூடாக இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட முடியும்.

3. **சேவை நிபந்தனைகள் :**

(i) *சம்பளம்*.- இப்பதவிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட திரட்டிய மாதச் சம்பள அளவுத்திட்டம் 2016.02.25 ஆந் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016(எம்என்-5-2016) அமைய ரூபா 34,605 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - 63,460 ஆக அமைவதோடு அச்சம்பளம் உங்களுக்கு 2020.01.01 ஆந் திகதியிலிருந்தே உரித்தாகும். அச்சுற்று நிருபத்தின் அட்டவணை II விதிமுறைகளுக்கமைய நியமனம் செயற்படுத்தப்படும் திகதியிலிருந்து உங்களுக்கான சம்பளம் வழங்கப்படும்.

(ii) இப்பதவி நிரந்தரமானது, இப்பதவிக்குரிய ஓய்வூதியத் திட்டம் குறித்து எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள கொள்கைசார் தீர்மானத்துக் கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

(iii) *பதவியை நிரந்தரமாக்குதல் :*

(அ) பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு நியமிக்கப்படும் நில அளவையியல் விஞ்ஞானப் பட்டதாரிகள் இலங்கை திணைக்கள அலுவல்களில் பயிற்சியைப் பூர்த்திசெய்தல் உள்ளடங்கலாக திணைக் களத்தில் மொத்தம் 4 வருடம் திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்த பின் சேவையில் நிரந்தர அந்தஸ்து வழங்கப்படும்.

(ஆ) பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு நியமிக்கப்படும் கணிதம் அல்லது பௌதீக விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டத்தையோ அல்லது கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையோ அல்லது சிவில் எந்திரவியல் பட்டத்தையோ உடையவர்கள் நில அளவை விஞ்ஞானத்தில் விஞ்ஞானப் பட்டத்தையும் பெற்று திணைக்கள அலுவல்களில் பயிற்சி உள்ளடங்கலாக திணைக்களத்தில் மொத்தம் 6 வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்த பின் இலங்கை நிலஅளவையார் சேவை வகுப்பு II/II இல் நியமிக்கப்பட்டு நிரந்தர அந்தஸ்து வழங்கப்படும்.

(iv) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு அவர்கள் உடல் ரீதியாக தகுதியுடையவர்களா என்பதை உறுதிப்படுத்துமுகமாக அரசாங்க வைத்தியசாலையில் அரசாங்க வைத்திய அதிகாரி ஒருவரினால் வைத்தியப் பரிசோதனை ஒன்றுக்கு உட்படுத்தப்படுவர்.

(v) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவி நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு பரீட்சார்த்திகளின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(vi) ஆட்சேர்ப்பு செய்யப்படும் அலுவலர்களுக்கு வழங்கப்படும் அரசாங்க களஞ்சியப் பொருட் களுக்காக ரூபா 25,000 பெறுமதியான பிணைமுறிக்கு உட்படல் வேண்டும்.

(vii) நில அளவையியல் விஞ்ஞானப் பட்டதாரிகள் பயிற்சிக்காலத்தின் பின் தொடர்ந்து மேலும் 06 ஆண்டு காலமும்/ கணிதம் அல்லது பௌதீக விஞ்ஞானம், கணினி விஞ்ஞானம், சிவில் எந்திரவியல் பட்டதாரிகள் பயிற்சிக்காலத்தைத் தொடர்ந்து மேலும் 08 ஆண்டு காலமும் இலங்கை நில அளவையாளர் சேவையின் நில அளவையாளர் ஒருவராக நில அளவைத் திணைக்களத்தில் சேவையாற்ற அவர்கள் உள்ளாவதோடு அதற்கென ரூபா 1,50,000 பெறுமதியான பிணை உறுதியொன்றுக்கு ரூபா 1,50,000 க்குக் குறையாத ஆதனம் கொண்ட பிணையாளர் ஒருவருடன் பிணை ஒப்பந்தத்துக்கு உட்படுதலும் வேண்டும்.

4. **பரீட்சை முறை**.- இப்பரீட்சை பின்வரும் 3 வினாத் தாள்களைக் கொண்டிருக்கும் :-

(1) கிரகித்தல் - 50 புள்ளிகள் (காலம் : 2 மணித்தியாலம்)
(2) நுண்ணறிவு - 150 புள்ளிகள் (காலம் : 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்)
(3) பொது அறிவு - 150 புள்ளிகள் (காலம் : 3 மணித்தியாலம்)

மொத்தம் - 350 புள்ளிகள்

*கிரகித்தல் வினாத்தாள்*.- இவ்வினாத்தாள் சிறிய பந்திகளின் உருவில் வழங்கப்பட்டுள்ள வினாக்களைக் கொண்டிருக்கும் அப்பந்தியில் அடங்கியுள்ள முக்கியமான விடயங்களை இயன்றவரை சுருக்கி ஒரு தனிவாக்கியத்தில் தருவதற்கு வேண்டப்படுவர். அத்துடன் கோடிடப்பட்ட சொற்கள் தொடர்பாக பரீட்சார்த்தியின் விபரிக்கும் ஆற்றல் பரீட்சிக்கப்படும். சில பந்திகளில் பலவாறான வினாக்கள் காணப்படும். அவற்றுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்வதற்கு பரீட்சார்த்தி எதிர்பார்க்கப்படுவர். சில

பந்திகள் பல விடைகளைப் பின்னணியாகக் கொண்ட கிரகித்தல் வினாக்களைக் கொண்டிருக்கும். பரீட்சார்த்தியினுடைய விளங்கிக்கொள்ளும் ஆற்றலை பரீட்சிப்பதன் அடிப்படையில் கேள்விகள் அமைக்கப்பட்டிருக்கும். மேலும் ஒரு நீண்ட பந்தி சுருக்கி எழுதுவதற்காக வேண்டப்படுவர். இவ்வினாத்தாள் 02 மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும்.

*நுண்ணறிவு.-* 1 1/4 மணித்தியாலங்களைக் கொண்டதாய் அமையும். இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் பகுத்தறியும் ஆற்றல், ஆய்வுத்திறன் தீர்மானம் எடுத்தல் என்பவற்றைப் பரீட்சிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டிருக்கும். பல விடைகளிலிருந்து பொருத்தமானதைத் தெரிவு செய்தல் மற்றும் சிறுவிடை வழங்கல் ரீதியில் 60 வினாக்களை கொண்டதாய் இவ் வினாத்தாள் அமையும் சகல வினாக்களுக்கும் விடை எழுதப்படல் வேண்டும்.

*பொது அறிவு.-* இவ்வினாத்தாள் தேசிய பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியாக உள்ள பல தரப்பட்ட அமைப்புச் சுற்றாடல்களிலும், எமது சமூகத்திலும் நிலவுகின்ற சமூக, அரசியல், பொருளாதார, கல்வி கலாச்சார விஞ்ஞானம் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விட எழுதப்படல் வேண்டும். இவ்வினாத்தாள் 03 மணித்தியாலங்களைக் கொண்டதாகும்.

**குறிப்பு** :

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(ii) பரீட்சையின்போது பரீட்சார்த்திகளின் எழுத்துக்கள் வடிவில்லாமலும், எழுத்துப் பிழைகளும் காணப்பட்டால் அவற்றுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும். அழகான எழுத்துக்களைக் கொண்டிராத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர்களாகக் கருதப்படுவர்.

(iii) அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவதை அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் கொண்டுள்ளார் என கருதலாகாது.

5. **தெரிவுமுறை.-** 2010.10.12 ஆந் திகதிய 1675/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக திருத்தப்பட்ட இலங்கை நில அளவையாளர்கள் சேவை பிரமாணக் குறிப்புகளின்படி நடாத்தப்படும் போட்டிப்பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்த பட்சம் 40% வீதமான புள்ளிகளை உதாரணமாக "கிரகித்தல்" வினாத்தாளுக்குரிய 50 புள்ளிகளில் 40% = 20 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள், அவர்கள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குவரிசையிலும், நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்படும்.

6. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்பு இப்பதவிக்கு வேண்டப்பட்ட எல்லாத்தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை** :

(i) மாதிரி விண்ணப்பப்படிவம்.- இவ்வறிவித்தலின் முடிவில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது பின்பற்றப்பட வேண்டும். விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு அவர்கள் தோற்றும் மொழிமூலத்தில் அவர்களுடைய விண்ணப்பங்களைத் தயாரிக்க வேண்டும். மேலும் அவர்கள் விண்ணப்பங்களை அவர்களுடைய சொந்த கையெழுத்தினால் நிரப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்புப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழிமூலப் பரீட்சார்த்திகள் சிங்கள மொழி மூலத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறே தமிழ் மொழிமூலப் பரீட்சார்த்திகளும் தமிழ் மொழிக்கு மேலதிகமாக பரீட்சையின் பெயரை ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப் படிவத்திலுள்ள ஒவ்வொரு பிரிவும் அதில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய கண்டிப்பாக பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரிகள் அவர்களுக்கு ஏற்புடையதாகாத ஏதேனும் பகுதிகளை "ஏற்புடையதல்ல" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரிகள், நிரப்பப்படாத நிரல்களைக் கொண்ட ஏதேனும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கண்டிப்பாகக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாத சகல விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சார்த்திகள் தாங்கள் அனுப்பும் விண்ணப் பத்தின் ஒரு பிரதியை தங்களுடன் வைத்திருப்பது அவர்களுக்கு பிரயோசனமானதாக இருக்கும். மேலும் விண்ணப்பதாரி, இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய அவரால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் அமைந்திருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(விண்ணப்பங்கள் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய A4 அளவுத்தாளில்

தயாரிக்கப்பட வேண்டியதுடன் இலக்கம் 01 இலிருந்து 05 வரையான கூடுகள் முதலாம் பக்கத்திலும், மிகுதியானவை ஏனைய பக்கங்களில் இரு புறத்திலும் தயாரிக்கப்பட வேண்டும்.)

(ii) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2016, ஒற்றோபர் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, த. பெ. 1503, கொழும்பு" எனும் முகவரியை அடையக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதியின் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சையின் பெயர், விண்ணபத்தைக் கொண்டிருக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

(iii) இப்பரீட்சைக்கான கட்டணம் 1000 ரூபாவைப் பரீட்சை ஆணையாளரின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் அரச வருமானத்தில் வரவு வைப்பதற்காக நாட்டின் எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் பணமாய்ச்செலுத்தி பரீட்சார்த்தியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய பகுதியில் கழராதவாறு நன்கு ஒட்டப்படுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகளோ முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. பரீட்சைக்கென செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்துக்காகவும் மீளளிக்கப்படமாட்டாது. என்றும் வேறொரு பரீட்சைக்காக மாற்றப்பட முடியாது என்பதையும் தயவாய் தெரிவிக்கிறேன்.

(iv) தற்போது அரசாங்க திணைக்களங்கள்/ சபைகள்/ கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றில் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட தமது திணைக்களத் தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். ஆகையால் விண்ணப்பதாரிகள் தமது பூர்த்திசெய்த விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு 2016.10.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு அனுப்புவதற்காக தமது திணைக்களத் தலைவரிடம் உரிய நேரத்தில் கையளிக்கவேண்டும். விண்ணப்பங்கள் நில அளவையாளர் நாயகம் அல்லது வேறு எவரேனும் திணைக்கள உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பெயரில் அனுப்பப்படக்கூடாது. திணைக்களத் தலைவரினூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள், விண்ணப்ப முடிவுத் திகதியின்பின் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது. அரசாங்க சேவையிலிருந்து கொண்டு விண்ணப் பிக்கும் பரீட்சார்த்திகள், விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படாமல் இருப்பதற்கு விண்ணப் பத்தில் அவர்களின் கையொப்பத்தை உறுதிப் படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பமும் உத்தியோக பூர்வ இலச்சினையும் பெறப்பட வேண்டும்.

(v) **உறுதிப்படுத்தல்**.- பரீட்சார்த்தியினுடைய ஆளடையாளம், அரசாங்க சேவையிலுள்ள ஒரு பரீட்சார்த்தியின் விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரினால் அல்லது வேறு எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோ கத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஏனைய பரீட்சார்த்திகளின் விடயத்தில் ஒரு சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரசாங்கப் பாடசாலை அதிபர் அல்லது கல்விப்பணிப்பாளரின் கட்டுப்பாட்டிலுள்ள பாடசாலை அதிபர், தரைப் படை, கடற்படை, விமானப்படையின் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரிகள், சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்ப மாதாந்த திரட்டிய சம்பளம் 2015.12.31 ஆந் திகதியன்று 22,935 ரூபாவை அல்லது அதற்கு மேல் சம்பளம் பெறும் அரசாங்க நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர்கள், புத்தவிகாரைகளுக்குப் பொறுப்பான பிக்கு, புத்த பிக்குகளின் தலைமைப் பிக்கு, ஏனைய வணக்கத் தலங்களுக்குப் பொறுப்பானவர்கள் அல்லது ஏனைய மதங்களைச் சேர்ந்த பிரபல்யம் வாய்ந்த சமயப் பெரியார்கள் ஆகியோரில் எவரேனும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

8. (i) பரீட்சை ஆணையாளர் நாயகம் தனக்குப் பிழையறப் பூரணப்படுத்தி அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதி அட்டை அனுப்பி வைப்பார். பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் தத்தமது கையொப்பங்கள் சான்றுபடுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். எவரேனும் ஒரு பரீட்சார்த்தி அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தைத் தவிர்ந்த வேறு ஏதேனும் பரீட்சை மண்டபத்திற்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவரது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் பரீட்சை தொடங்கும் முதல் நாளில் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கவனிக்கவேண்டிய பொதுவான நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. சகல பரீட்சார்த்திகளும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக நடப்பதற்கு வேண்டப்படுகிறார்கள். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டதும் அதுபற்றிய அறிவித்தல் ஒன்று இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

அவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 02 அல்லது 03 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டையை விண்ணப்பதாரி ஒருவர் பெற்றுக்கொள்ளாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது பற்றி இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசம் உள்ள விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு என்பவற்றின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகள், பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளியேயுள்ள பிரதேசங்களாயின் அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய தொலைநகல் (பக்ஸ்) இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு உமது விண்ணப்ப கடிதத்தை இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு காலதாமதமின்றி அனுப்பி வைப்பதுடன் அவற்றின் பிரதிகளை தங்களுடன் வைத்திருப்பது தங்களுக்கு பயனுள்ளதாகும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்குவதை பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகுதிகளையும் பெற்றுள்ளார் என்று கருதலாகாது. பரீட்சையை நடத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்ட விதிகளுக்கமைய நடந்துகொள்வதற்கு சகல பரீட்சார்த்திகளும் வேண்டப்படுகிறார்கள். அத்தகைய விதிகளை மீறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவார்.

(ii) *பரீட்சை பெறுபேறுகள்*.- இவ்வறிவித்தலின் 05 ஆம் பந்திக்கு அமைவாகத் தகைமைபெறும் பரீட்சார்த்திகளின் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை நிலஅளவையாளர் நாயகம், நில அளவைத்திணைக்களம் இடம் வழங்கப்படும். அதற்கு மேலதிகமாக பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறு பேறுகள் தனிப்பட்டமுறையில் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.result.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடல் மூலம் அறிவிக்கப்படும்.

9. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடங்கள் தொடர்பாகவும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்கத் தவறும் எவரேனும் பரீட்சார்த்தியின் பரீட்சார்த்த நிலை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பிரகாரம் இரத்துச் செய்யப்படும்.

10. **பரீட்சைத் தகைமைகளுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்** :

(i) விண்ணப்பத்துடன் பணம் செலுத்திய பற்றுச் சீட்டைத் தவிர வேறு எந்த ஆவணங்களும் இணைக்கப்படக் கூடாது. ஆனால் வேண்டப் பட்டவாறு, பரீட்சைத் தகைமைக்குத் தேவையான விபரங்கள் அனைத்தும் விண்ணபத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். சகல விண் ணப்பங்களும் எல்லா விடயங்களையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். சரியாகப் பூர்த்தி செய்யப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் ;

(ii) நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைப்பதற்கு தகைமை பெற்ற பரீட்சார்த்திகள், நேர்முகப் பரீட்சையின்போது தமது தகைமைத் திறன்களை ஆவணச் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் நிரூபித்தல் வேண்டும் ;

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் :

(அ) பொறுப்பு வாய்ந்த நபர் ஒருவரிடமிருந்து பெற்ற நல்லொழுக்கச் சான்றிதழ் ஒன்று ;

**குறிப்பு**.- இச்சான்றிதழ் சமாதான நீதவான், சட்டத்தரணி, பரீட்சார்த்தி வசிக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலாளர் அல்லது சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்ப மாதாந்த சம்பளப்படி நிலையில் 2015.12.31 ஆந் திகதியன்று ரூபா 22,935 அல்லது அதற்கு மேல் திரட்டிய மாதாந்த சம்பளத்தைப் பெறுகின்ற நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் அல்லது நேரடியாக தகவல் பெறக்கூடிய எவரேனும் பிரசித்தமான நபர் ஒருவரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும். அச்சான்றிதழில் உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிப் பெயர், முகவரி என்பன தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அரசாங்க சேவைகளில் நிரந்தரப் பதவிகளை வகிக்கும் விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசிய மில்லை.

(ஆ) பிறப்புப் பதிவேட்டின் ஒரு உறுதிப்படுத்தப்பட்ட பிரதி (பிறப்பை பதிவு செய்யாத விண்ணப்ப தாரியின் விடயத்தில்) அல்லது பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பரீட்சார்த்தியின் வயது தொடர்பான அனுமானச் சான்றிதழ் ;

**குறிப்பு** :

(i) பாடசாலையில் பாவிக்கும் நோக்கத்திற்காக அல்லது கல்வி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் விசேட பிறப்புச்சான்றி தழ்களோ அல்லது பிறப்புப் பதிவேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட பகுதிகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது ;

(ii) சத்தியக்கடதாசிகளோ அல்லது ஞானஸ் நானம் பெற்ற சான்றிதழ்களோ பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர்/ பெயர்களுக்கும் பரீட்சைக்குத்

தோற்றும் பரீட் சார்த்தியின் விண்ணப்பத்தில் உள்ள பெயர்/ பெயர்களுக்கும் இடையில் ஏதேனும் வித்தியாசம் காணப்பட்டால், விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர்/பெயர்களை பிறப்பு, இறப்புப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் இல. 27 அல்லது 28 (அத்தியாயம் : 110) இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அமைவாக சரியாக திருத்திப் பெறுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் ;

(iii) விண்ணப்பதாரி, பதிவின் மூலம் ஒரு இலங்கைப் பிரசை அல்லது விண்ணப்பதாரி பரம்பரையினால் இலங்கைப் பிரசை எனும் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுக்கடிதம் (பொருத்தமானவாறு) ;

(iv) கல்விச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் அல்லது சான்றிதழ்கள் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படா விட்டால் அச்சான்றிதழ்களை செயன் முறைப்படுத்துவதற்கான வேறு ஏதேனும் உத்தியோகபூர்வமான கடிதங்கள் அதாவது விண்ணப்பதாரி அவருடைய இறுதிப் பட்டப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் என்று பட்டச்சான்றிதழை நடைமுறைப் படுத்தக்கூடியவாறான சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வக் கடிதம்.

(v) இப்பதவிக்காக விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரிகள் இப்பதவிக்குத் தேவையான தகைமைகளைப்பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள். பரீட்சார்த்தி ஒருவர், வேண்டப்படும்போது தேவையான தகைமைகளைச் சமர்ப்பிப்பதற்கு தவறும் பட்சத்தில் அல்லது அத்தகைய தகைமைகளை சமர்ப்பிப்பதில் தாமதங்கள் ஏற்படுமிடத்து அவர் இப்பதவிக்கு தகைமையற்றவராகக் கருதப்படுவார்.

11. **பொய்யான தகவல் வழங்குதல்.**- இப்பரீட்சைகளின் நியதிகளின்படி, இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனும் பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவருடைய பரீட்சார்த்தி உரிமை பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் காலத்திலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்த நேரத்திலும் இரத்துச் செய்யப்படலாம். ஒரு பரீட்சார்த்தியின் சேவைக்காலத்தின் போது, அவர் முக்கிய தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருந்தால் அல்லது அவருடைய அறிவுக்கெட்டியவரையில் ஏதேனும் பிழையான தகவல்களை வழங்கியிருந்தால் அல்லது இப்பரீட்சைக்காக வேண்டப்பட்ட தேவையான தகைமைகளை பூர்த்திசெய்யவில்லை என உறுதிப்படுத்தப்பட்டால் குறித்த நபர் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படலாம்.

இவ்வறிவித்தலில் உள்ள அவசியமான தேவைப்பாடுகளை முறையாக பூர்த்தி செய்யாத எவரேனும் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

12. இந்நிபந்தனைகளில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் நிலஅளவையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிச் சொற்கள் இடையே ஏதேனும் பொருத்தமற்ற தன்மை அல்லது முரண்பாடுகள் இருப்பதாகத் தென்படின் அச்சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பீ. எம். பீ. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்,
இல. 150, கிருல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிலஅளவைத் திணைக்களம்**

***இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016***

**Open Competitive Examination for Recruitment to the Posts of Apprentice Surveyors in the Survey Department of Sri Lanka - 2016**

(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்.)

1. பரீட்சைக்கு நீர் தோற்றுகின்ற மொழி மூலம் :
   சிங்களம் - 2
   தமிழ் - 3
   ஆங்கிலம் - 4
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2. பெயர் :
   2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.
   உ+ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA

   2.2 கடைசியாய் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னாலும் இட்ட பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.
   உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.

   2.3 முழுப்பெயர் (சிங்களம்/ தமிழில்) :----.

3. முகவரி :-

3.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

3.2 நிரந்தர முகவரி (சிங்களம்/ தமிழில்) :----.

3.3 அலுவலக முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துக் களில், ஏற்புடையதாகவிருந்தால்) :----.

3.4 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3.5 தொலைபேசி இலக்கங்கள் :
கையடக்கம் :----.
நிலையான :----.

4. 4.1 பால் :
பெண் - 1, ஆண் - 0
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

4.2 பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

4.3 2016.10.31 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

5. 5.1 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

[ | | | | | | | | | | | ]

5.2 வழங்கப்பட்ட திகதி :----.

6. தேசிய இனம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
இந்தியத்தமிழ் - 3
முஸ்லிம் - 4
ஏனையவை - 5
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

7. 7.1 பெற்றுள்ள பட்டம் :
அளவையியல் விஞ்ஞான விஞ்ஞான மாணிப் பட்டம் - 1
பௌதீகவியல் (கணிதம் அடங்கலாக) விஞ்ஞான மாணிப் பட்டம் - 2
கணினி விஞ்ஞான விஞ்ஞானமாணிப் பட்டம் - 3
சிவில் எந்திரவியல் பட்டம் - 4
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

7.2 க. பொ. த. (உ.த.) பரீட்சை சித்தியெய்திய வருடம் :----.
பரீட்சை சுட்டிலக்கம் :----.
சித்தியெய்திய பாடங்கள் :----.

8.
(i) பட்டம் பெற்ற திகதி :----.
(ii) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(iii) பதிவு செய்யப்பட்ட இலக்கமும் திகதியும் :----.
(iv) வெளிவாரி/ உள்வாரி :----.
(v) பட்டப்பெயர் :----.
(vi) பாடங்கள் :----.
(vii) பெற்ற வகுப்பு :----.
(viii) மேல்பிரிவு/ கீழ்பிரிவு :----.
(ix) சுட்டிலக்கம் :----.
(x) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.

9. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு கழராதவாறு ஒட்டவும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உங்களுடன் வைத்திருக்கவும்.

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு நன்கு ஒட்டவும். |
|---|

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கெட்டிய வரையில் உண்மை யானதும், சரியானதும் என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ............ ஆம் இலக்க ............ ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இத்தால் வெளிப்படுத்துகிறேன். மேலும் இப்பரீட்சையின் விதிகள் பிரமாணங்களுடன் இணங்கி நடப்பதற்கும், இப்பரீட்சை நிபந்தனைகளின்படி தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்போ பரீட்சார்த்தி நிலையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு முடிவுகளையும் நான் ஏற்றுக்கொள்வதற்கும் இணங்குகிறேன். அத்துடன் பரீட்சையை நடத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு உட்படுவேன் என்றும் வெளிப்படுத்துகிறேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

11. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் :**
(பந்தி 07 இல் உள்ளவாறு இருத்தல் வேண்டும்.)

மேற்படி விண்ணப்பதாரி, திரு./ திருமதி/ செல்வி ........................................................ (முழுப்பெயர்) எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் அவர்,

அவருடைய கையொப்பத்தை என் முன்னிலையில் ........... ...................... ஆந் திகதியன்று இட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

12. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்** :-
(ஏற்புடையதாக இருந்தால் மட்டும்)

மேற்படி விண்ணப்பதாரி, திரு./ திருமதி/ செல்வி .............................................. இந்த திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபையில் பணியாற்றுகின்றார் என்றும் அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும், அப்பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது என்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திணைக்களத் தலைவரின் பெயர் :----.
பதவிப்பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :-----.

9-1152